DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 2/2020** |
| Deposition of Witness for | : PW2 |
| Name | :பிரிட்டோ |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 02.07.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 02 July 2026.

**எதிரி ஆஜரில்லை. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் வசித்து வருகிறேன். நான் போட்டோ கிராபராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனக்கு தெரியாது. கடந்த 6 வருடத்திற்கு முன்பு என் மச்சான் வில்லியம் என்பவருக்கு விபத்து ஏற்பட்டது. அதை பார்த்த நான் என் சித்தப்பா ஏசு என்பவருக்கு தகவல் சொன்னேன். பின்பு அம்புலன்ஸ்க்கு போன் செய்து மருத்துவமனைக்கு நான் சென்றேன். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

நான் போலீசார் விசாரணையில் அ.சா.1—ன் மருமகன் சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து தீபாவளி விடுமுறைக்காக அ.சா.1—ன் வீட்டிற்கு வந்து கடந்த 05.11.2018—ம் தேதி மாலை அ.சா.1—க்கு சொந்தமான TN76Y 0790 TVS Victor என்ற இருசக்கர வாகனத்தில் சங்கரன்கோவில் சென்றுவிட்டு இரவு 7.00 மணியளவில் வாகைகுளம் நோக்கி EB ஆபிஸ் ரோட்டின் வடபுறம் வந்துகொண்டிருந்தபோது நான் பின்பக்கமாக எனக்கு சொந்தமான வாகத்தில் சென்று கொண்டிருந்தேன். அப்போது அதே ரோட்டில் கிழக்குமேற்க்காக TN 79 E 1027 மாருதி சுசுகி டிஸைர் வாகனத்தை அதிவேகமாகவும், அஜக்கிரதையாகவும் ஓட்டி வந்து அ.சா.1 மருமகன் மீது மோதியதில் அ.சா.1—ன் மருமகன் தூக்கி ஏறியப்பட்டு சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். மேற்படி தகவலை நேரடியாக பார்த்த நான் அ.சா.1—க்கு போன் மூலம்தகவல் தெரிவித்தார். அதன் அடிப்படையில் நானும் என் உறவினர்களும் சம்பவயிடம் சென்று பிரேதத்தை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று பின்பு விபத்து சம்மந்தமாக காரை ஓட்டி வந்த நபர் மீது நடவடிக்கை எடுக்க கோரி அ.சா.1 புகார் மனு கொடுத்தார் என போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியை வழக்கில் இருந்து விடுவிப்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

எனக்கு வாகன விபத்து குறித்து நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களைத்தான் போலிசார் விசாணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

(Sd/-)M.Mari

Judicial Magistrate,

Sankarankovil.